பழனி ஊராட்சி ஒன்றியம் - கோதைமங்கலம் ஊராட்சி மன்ற தலைவரின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.ப.செல்வகுமார்.

அனுமதி.எண்:02/2024/கோ.ம.ஊ நாள்: 25.09.2024

தீர்மான எண்:85/2024-2025
தீர்மான நாள்: 19.08.2024

பொருள்: புதிய குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி - பழனி ஊராட்சி ஒன்றியம் - கோதைமங்கலம் ஊராட்சி - உட்கடை கிராமம் சர்வே எண்: 375/1B1 மற்றும் 375/2B1-ல் அமையும் குடியிருப்பு மனை உட்பிரிவு மனைகளுக்கு ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக

பார்வை : திண்டுக்கல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக ந.க.எண்:0LU3Q7CC/2024/TCP, நாள்: 17.04.2024 மற்றும் SWP/DTCP/DINDIGUL/LATOUT NO:78/2024.

⏮ ⏭

உத்தரவு

பார்வையில் காணும், திண்டுக்கல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் உத்திரவின்படி, பழனி ஊராட்சி ஒன்றியம், கோதைமங்கலம் ஊராட்சி கோதைமங்கலம் கிராமம் சர்வே எண் 375/1B1 மற்றும் 375/2B1-ல் மொத்த 1.00 ஏக்கர் பரப்பளவில் சாலைகள் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட இடங்கள் மற்றும் TANGEDCO ஒதுக்கீடு போக 17 மனை எண்கள் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு குடியிருப்பு மனைகளாக அங்கீகரிக்கப்பட்டு உத்திரவிடப்படுகிறது.

1.அங்கீகாரம் வழங்கப்பட்ட மனைப்பிரிவுகள் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி அளவுகள் பராமரிக்கப்படவேண்டும்.(நீளம் ×அகலம்)

2.குடியிருப்பு மனைகளை தவிர வேறு நிறுவனங்களுக்காக பயன்படுத்தப்படக்கூடாது.

3.மனைப்பிரிவு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்ட வரைபட அனுமதி ஊராட்சி மன்றத்தால் அனுமதி பெற்று கட்டப்படவேண்டும்.

4.உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பரப்பு (21.83 சமீ), மற்றும் TANGEDCO-தானமாக ஒப்படைக்கப்பட்ட (21.83 சமீ)பரப்பினை வேலியிட வேண்டும்.

5.பார்வையில் காணும் உத்தரவில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனையின்படி கழிவு நீர் வாய்க்கால் மற்றும் தார்சாலைகள் அமைக்கப்பட வேண்டும்.

6.குடிநீர் வழங்குவதற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட வேண்டும்.

7.கழிவு நீர் வாய்க்காலில் வரும் தண்ணீரை ஓடையில் கலக்கா வண்ணம் தனியாக கால்வாய் அமைக்கப்பட வேண்டும் அல்லது உறிஞ்சு நீர் குழிகள் மூலம் கழிவு நீர் வாய்க்காலில் வரும் நீர் ஓடையில் கலக்கா வண்ணம் முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

8.மத்திய மற்றும் மாநில அரசின் துறைமூலம் எந்த நிலையிலும் அனுமதி கோரினால் அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு நிலம் வழங்கப்படவேண்டும்.

9.மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் வரைபடத்தில் தெரிவித்த விபரங்கள் 6 × 4 அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படவேண்டும்.

10.நில உபயோக மாற்றத்திற்காக சந்தை மதிப்பீட்டில் 3% தொகை ரூ.1,95,494/- ரசீது எண்:20240909006827 நாள்:09.09.2024 மூலம் அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

11.பரிசீலனை கட்டணமாக ஒரு மனைப்பிரிவுக்கு தொகை ரூ.3000/- வீதம் 17 மனைப்பிரிவுகளுக்கு தொகை ரூ.51,000/- கோதைமங்களம் ஊராட்சி பொது நிதி இந்தியன் வங்கி கணக்கு எண்:7386948705 நாள்:06.09.2024 ஊராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது.

12.மனைப்பிரிவு விற்பனை செய்யப்படும் நிகழ்வில் பார்வையில் காணும் உத்திரவு வரைபடம் மற்றும் ஆவணங்கள் வாங்குபவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.

13. மனைப்பிரிவு வழங்க தங்களால் வழங்கப்பட்ட தகவல்கள் தவறாக இருப்பின் எந்தவித முன் அறிவிப்பும் இன்றி அனுமதி ரத்து செய்யப்படும்.

14.பார்வையில் காணும் உத்திரவில் தெரிவிக்கப்பட்ட சிறப்பு நிபந்தனைகளை பத்தி எண்: 1.b ல் கோதைமங்கலம் ஊராட்சியில் குடிநீர் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

15.ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட இடங்களில் ஆக்கிரமிப்பு செய்வதோ, ஊராட்சியை தவிர எவரும் பயன்பாடு செய்வது கூடாது.

ஊராட்சி மன்ற தலைவர்
கோதைமங்கலம் ஊராட்சி

இணைப்பு:

பல்வகை ரசீது

அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் - 2

பெறுநர்:

Thiru.V.Muthusamy
S/O.Thiru.Veluchamy Naidu
163C Rajbhavan Cheriyath Road
Parakkal Mahe Near PK Ramam Memorial School
Puduchery

நகல்:

1.ஊராட்சி மன்றத் தலைவர் மேஜைக்கு.
2.ஊராட்சி செயலர், கோதைமங்கலம் ஊராட்சி,
(ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட சொத்துக்களை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) மூலம் பழனி வட்டாட்சியர் அவர்களிடம் ஊராட்சி மன்ற தலைவரின் பெயரில் பட்டா பெற்று வழங்கிட வேண்டும்)

தீர்மான நகல்

20[illegible] ஆம் ஆண்டு ..... மாதம் ..... ஆம் நாள் ..... கிழமை

காலை / மாலை ..... மணிக்கு ..... ஊராட்சியின் சிறப்பு /

அவசர கூட்டத்தின் நடவடிக்கைகள்.

இடம் : ஊராட்சி மன்ற அலுவலகம்

வருகை : தலைவர் திரு / திருமதி ..... அவர்களும்

மற்றும் ..... அங்கத்தினர்களும்

பொருள் 41	தீர்மானம் 85
பஞ்சாயத்து நிர்வாகம் கோணமங்கலம் ஊராட்சி கோணமங்கலம் கிராமத்தில் சர்வே எண் 375/1B1 மற்றும் 375/2B1-ல் 1.00 ஹெக்டர் இடத்தில் 435600 ச.அடி (அ) 4055.00 ச.மீ பரப்பளவில் உள்ள இடத்தினை மனைவரி செய்து வரன்முறை செய்வதற்கு திரு.P. ஜெகதீசன் த/பெ வேலுச்சாமி நாயுடு என்பவருக்கு மனைவரி அனுமதி வழங்கி மன்றம் அனுப்பலாம். P. ஜெகதீசன் // உண்மை நகல் //	திரு நகர் உறுப்பினர் கையெழுத்திட்டு அவர்களுக்கு பரிந்துரை செய்ய முன்மொழிகிறார்.